# அறிவூட்டும் அகவுணர்வுகள்

**R. ஸ்டான்லி,** B.E., M.Tech.

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

*வெளியிடுவோர்:*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**

சர்ச் காலனி, வேலூர் 632 006

*தொலைபேசி: 00 91 416 2242943, 2248943*

*<hq@bymonline.org>   www.bymonline.org*

**INSPIRED INSIGHTS** (Tamil)

Copyright 1996
R. STANLEY
13 Church Colony,
Vellore 632 006, India

*<stanleyonbible@hotmail.com>*

First Edition : October 1996
This Edition : January 2015

Typeset by K. Gunasekaran,
Retired Missionary, BYM

*Permission must be obtained from the author for any type of reproduction of the articles from this book.*

Writers and editors may freely reprint the outlines from this book provided they mention the source and send a copy of the published material to the author.

Printed by
Bapuji Printers, Chennai

# அறிவூட்டும் அகவுணர்வுகள் என்றால் என்ன?

வேதத்தைத் தியானிப்பது மற்றும் ஜெபிப்பது தவிர்த்து சிந்தித்தல் என்னும் பயிற்சியையும் நான் அடிக்கடி மேற்கொள்ளுகிறேன். எனது பயணங்கள், காலை மாலை நடைகள் மற்றும் ஓய்வு நேரங்களில் இதைச் செய்கிறேன். சிந்திப்பதற்கான காரியங் களைச் சில வேளைகளில் நானே தெரிந்தெடுத்துக் கொள்ளுகிறேன். மற்றபடி என் மனதில் அவ்வப் போது பளிச்சிடும் காரியங்களில் என் சிந்தனையைச் செலுத்துகிறேன். இப்பயிற்சியின் முடிவில் இக்கருத் துக்களை சுருக்கமான சில வரிகளில் எழுதிவிடும் நிலையடைகிறேன். இவற்றை எனது குறிப்பேட்டில் எழுதி வைத்துக்கொண்டு இவை வேத வசனத்திற்கு இசைந்து இருக்கின்றனவா எனக் கணிக்கிறேன். ஒரு கருத்து சத்தியந்தான் என்ற அகவுணர்வு அதிகரித்த தும் அதை ஓர் *அறிவூட்டும் அகவுணர்வு* என்றழைக் கிறேன். 1991 முதல் 1995 வரை எனது நாட்குறிப் பேடுகளில் எழுதி வைத்துள்ளவற்றின் தொகுப்பே இச்சிறு நூலாகும்.

வேதப்புத்தகங்களின் ஆக்கியோன்களைப் போல நான் இந்த *அறிவூட்டும் அகவுணர்வுகள்* தவறாதவை (infallible) என உரிமைபாராட்ட முடியாது. ஆனால் ஆவியானவரின் உந்துதல்களும், வேதத்தின் தத்து



வங்களும், காலத்தின் நிலைமைகளும் இந்த அக வுணர்வுகளின் பயனை உறுதிப்படுத்தும். தேவனது இரட்டை வரங்களாகிய ஞானத்தைப் போதிக்கும் வார்த்தைக்காகவும், அறிவை உணர்த்தும் வார்த்தைக் காகவும் அவருக்கே துதியுண்டாகட்டும். இந்த அக வுணர்வுகளில் பெரும்பாலானவை பகுத்தாயும் பாணியில் அமைந்துள்ளதால் அவை குற்றங்காணல் போல் தோன்றலாம். ஆக்கபூர்வமான குற்றங்காண லில் நான் நம்பிக்கையுள்ளவன் — இடிக்கவும் கட்டவும்!'' (எரே 1:10).

இந்த 132 அறிவுட்டும் அகவுணர்வுகள் எந்த வொரு அடிப்படையிலும் வரிசைப்படுத்தப்பட வில்லை. இவை *ஆசீர்வாதப்* பத்திரிகையில் அவ்வப் போது சரங்களாய் வெளிவந்தன. அதே வரிசையில் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. எந்த இரு பக்கங் களை நீங்கள் எடுத்து வாசித்தாலும் பல்வேறு காரியங்கள்மீது சிந்தனைக்கு உணவு உங்களுக்குக் கிடைக்கும். ஒரே நேரத்தில் இரு பக்கங்களுக்குமேல் வாசிக்காது இக்கருத்துக்களை அசைபோடும்படி உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். பரிசுத்த ஆவியானவர் இக்காரியங்களைக் குறித்த உங்கள் அறிவை மென்மேலும் தெளிவாக்க ஜெபிக்கிறேன். இந்த அறிவூட்டும் அகவுணர்வுகளை நீங்கள் எங்கும் தாராளமாக எடுத்தாளலாம்.

இந்த அகவுணர்வுகளின் மொழிநயத்தையோ கருத்தாழத்தையோ நீங்கள் பெருக்கக் கூடுமானால், அடுத்தப் பதிப்புகளில் உங்கள் ஆலோசனைகளைச் சேர்த்துக்கொள்ள மகிழ்வுடன் ஆயத்தமாயிருக் கிறேன். நீங்கள் இச்சிறு நூலைப் படிப்பதினால் உங்கள் சிந்தனைக்கும் உணர்வுக்கும் பயனுள்ள பயிற்சி கிட்டும்.

# அறிவூட்டும் அகவுணர்வுகள்

''இல்லாவிடில்,'' ''அதுவரை'' ஆகிய இரண்டும் இறையரசின் திறவுகோல் வார்த்தைகளாகும். நீங்கள் ஆவியினால் பிறவாவிடில் இறையரசில் சேர முடியாது. ஆவியினால் நிரப்படும்வரை பிறரை இறையரசில் சேர்க்க முடியாது.

❒

விசுவாசிகள் யாவரும் இறையியலராவர். ஆனால் இறையியலர் யாவரும் விசுவாசிகளென்று சொல்ல முடியாது. தேவனைப் பற்றிய அறிவே இறையியலாகும். ஆனால் கிறிஸ்துவின்மீதுள்ள தனிப்பட்ட வரது விசுவாசமே தேவனை அறிவதின் துவக்கமாகும்.

❒

எந்தவொரு விசுவாசியையும் குறிப்பிட்டு அவன் வரம் பெற்றவன் என்று சொல்வது தவறு. விசுவாசிகள் எல்லாருமே வரம் பெற்றவர்கள்தான். கிறிஸ்துவின் உடலில் வரமில்லாத உறுப்பே கிடையாது.

❒

தேவ மக்களைக் குருமார், சபையார் என்று பிரிப்பதால் இரண்டாம் குழுவினரை வேலையில்லாப் பெரும்பான்மையோராய் மாற்றிவிட்டோம்.



❒

நமக்குக் கொடுக்க ஆவியியானவரிடமிருப்பது ஒன்பதே வரங்களானால் அவர் சரியான கருமி அல்லது பரம ஏழை. எந்தவொரு பட்டியலாலும் தேவனை மட்டுப்படுத்தத் துணியாதிருப்போம்.

❒

கிறிஸ்தவர்கள் வாசிக்காமல் வைத்திருக்கும் வேதாகமங்களையெல்லாம் சேகரித்தால் இன்னும் பல லாண்டுகட்கு வேதப் புத்தகம் அச்சடிக்கத் தேவையிருக்காது.

❒

புதிய ஏற்பாட்டுச் சபையின் மற்றும் ஊழியத்தின் மாதிரியைக் குறித்து ஏராளம் பேசுகிறோம். நல்லது — ஆனால், அதின் வல்லமை எங்கே? எஞ்சின் இல்லாத மாருதி காரைவிட மாட்டு வண்டியே மேல்.

❒

கிறிஸ்தற்ற பெந்தெகொஸ்தேக்கும், அதே வேளையில் பெந்தெகொஸ்தேயற்ற கிறிஸ்தவத்திற்கும் எச்சரிக்கை!

❒

வேதத்திலிருந்து குறைக்கும் சபைகளும், வேதத்தோடு கூட்டும் சபைகளுமுண்டு. முதல் வகுப்பினர் தங்களது பாரம்பரியங்களைப் பாதுகாக்க வேதத்தின் தெளிவான பல போதனைகளை மறைத்து, மறுத்துவிடுகின்றனர். அடுத்தவர் வேதம் போதிக்காத சட்டதிட்டங்களைக் கிறிஸ்தவ வாழ்க்கையோடு சேர்த்துக் கொள்ளுகின்றனர். நமது உபதேசத்திலும் ஊழியத்திலும் வேதத்தோடு ஒன்றையும் கூட்டவும் மாட்டோம், அதிலிருந்து ஒன்றையும் குறைக்கவும் மாட்டோம் என்றிருக்கவேண்டும்.

❐

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், போதகர் ஆகியோரின் உதவியின்றி தனது சபையைக் கட்டும் மேய்ப்பர், கட்டிடமொன்றைக் கட்ட தச்சர், கொல்லர், குழாய் போடுபவர், மின் வேலையாளர் போன்றோரின் உதவி நாடாத கொத்தனாரைப் போன்றவர். எந்த ஊழியனுக்கும் எல்லா வரமும் இருப்பதரிது. மோசேக்கும் சாலொமோனுக்கும்கூட தங்கள் கட்டுமானப்பணிக்கு பெசலயேலும் ஈராமும் தேவையாயிருந்தனர்.

❐

அப்போஸ்தலர் 1:8இன் வல்லமையை மட்டும் நாடினால் போதாது. அதில் வரையறுக்கப்பட்டுள்ள ஊழியத் திட்டத்தையும் நிறைவேற்றவேண்டும்.

❐

படுத்த படுக்கையாயிருந்து சபைக்கு முதுகில் புண்கள் வந்துவிட்டன.

❐

அனுப்பப்பட்டவன் அவனை அனுப்பினவரிலும் மேலானவனல்ல (யோ 13:16). மிஷனரிகளை அனுப்பும் சபைகளின் ஆன்மீக வாழ்வு அவர்களால் அனுப்பப்பட்ட மிஷனரிகளின் ஆன்மீக வாழ்வைப் போலவே முக்கியமானது.

❐

இன வெறிக்கும் ஊர் வெறிக்கும் சாகாதோருக்கு மாற்றுக்கலாச்சார நற்செய்திப்பணி குறித்துப் பேச என்ன அருகதை?

❐

மிஷனரி நிறுவனமொன்றின் தத்துவத்தில் ஊழி



யரை விட ஊழியமே முக்கியமாகுமானால், அந்த இயக்கம் இயந்தரமாகிவிடும்.

❐

மிஷனரிப் பணியின் ''ஆசீர்வாதங்களைச்'' சொன்னால் ஊழியத்திற்குப் போவோர் பெருகுவர். மிஷனரிப் பணியின் ''ஆபத்துக்களைச்'' சொன்னாலோ ஊழியத்தைத் தாங்குவோர்தான் பெருகுவர்.

❐

இதயங்கள் பிரிந்திருக்கும்போது கரங்களைக் கோர்ப்பது மாய்மாலம் (2 இரா 10:15,16).

❐

நவநாவுகளோ, தீர்க்கதரிசனமோ, சுகமளித்தலோ அல்ல; ஆயிரக்கணக்கான விசுவாசிகள் தங்கள் உடைமைகளைப் பொதுவாக அனுபவித்ததே பெந்தெகொஸ்தேயின் மாபெரும் அற்புதம். நடைமுறையில் செயலாற்ற இதுவே மிகக் கடினம். முயற்சித்துப் பாருங்களேன்.

❐

நமது தலைகளைத்தான் ஒன்று சேர்க்க முடியாவிட்டால், சிம்சோனின் நரிகளைப்போல் நமது வால்களையாவது சேர்த்து எதிரியின் பீடங்களைத் தீக்கிரையாக்கலாமே!

❐

இன்று எங்கு பார்த்தாலும் தலைமைப் பயிற்சித் திட்டங்கள்தான். ஆனால் பிரச்னை என்னவெனில், பயிற்சித் தருவோர் பலர் தலைவர்களல்ல! அவர்கள் ஏதோ புத்தகங்களிலிருந்து தலைமைத் தத்துவங்களைப் படித்திருப்பார்கள். அல்லது எப்படியோ நிர்வாகப் பொறுப்புகள் அவர்களுக்குக்

கிடைத்திருக்கும். இன்று நமது சபைகளிலும் சங்கங்களிலும் தலைவர்களைவிட அதிகாரிகளே அதிகம் இருப்பதில் ஆச்சரியமுண்டோ?

❐

தலைமைப் பொறுப்பென்றால் தியாகம் செய்தாக வேண்டும். நல்ல தலைமைக்கு நிறைய தியாகம் தேவை (யோ 10:11).

❐

பாப்டிஸ்ட் ஜான், மெதடிஸ்ட் ஜான் (வெஸ்லி) ஆகிய இருவரும் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளனர்.

❐

தீர்க்கதரிசிகள் ஆண்டவரால் பயிற்றுவிக்கப்பட்டு, ஆவியானவரால் பக்குவப்படுத்தப்பட்டவர்கள். அவர்களுக்கு மனிதர் படிப்பிக்க முடியாது. அவர்கள் முறைகளை பழக்குவிக்கவும் முடியாது.

❐

நமக்குத் தர்க்கம் நிறைய உண்டு; ஆனால் தீர்க்கம் இல்லை. பரத்திலிருந்து வந்தால்தான் இகத்தில் ஏதாவது செய்ய முடியும்.

❐

''போதும்'' என்றான் எலியா. ''முடிந்தது'' என்றார் இயேசு. முடிந்தாலொழிய போதாது.

❐

இயேசு தட்டும்பொழுது உன் இதயக் கடவை நீ திறக்காவிடில், தேவையில் நீ தட்டும்போது அவர் பரலோகக் கதவைத் திறப்பாரென்று நீ எதிர்பார்ப்ப தெப்படி?

❐



முன்பு பிரியமில்லாதவைகளை இப்பொழுது பிரிய மாக்குவதும், முன்பு பிரியமில்லாதவைகளை இப் பொழுது பிரியமாக்குவதுமே மறுபிறப்பின் செயலா கும். எல்லாம் புதிதாயிற்று என்பதின் பொருளிதுவே.

❐

TBயினால் கெடுவது நுரையீரல்கள்; TVயினால் கெடுவது இருதயம்.

❐

நவநாவுகள்தான் ஆவியின் அபிஷேகத்திற்கு ஒரே அடையாளமென்று வேதம் எங்கும் போதிக்க வில்லை. மாறாக, நாவடக்கம்தான் உண்மையான ஆன்மீகத்திற்கு முடிவான அடையாளமென்று அது அழுத்திக் கூறுகிறது. நமக்கு வரங்களும் தேவை; கனிகளும் தேவை. ஆனால் நாம் அறியப்படுவது கனிகளாலேயே.

❐

நமது ஆத்தும மீட்பை அலட்சியம் பண்ணும்போது தேவ கிருபையை விருதாவாய்ப் பெறுகிறோம். ஆத்துமாக்களை மீட்பதில் அக்கறையின்றி இருக்கும்போது தேவ வல்லமையை விருதாவாய்ப் பெறுகிறோம். முந்தியது பாவிகளின் பாவம்; அடுத்தது பரிசுத்தவான்களின் பாவம்.

❐

எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் ''போ'' என்ற சவால் கொடுப்பதற்குப் பதிலாக ''போ அத்துடன் அனுப்பு'' என்று சொல்லிவிட்டோம். பெரும்பான்மையினர் தங்கிவிட்டுப் பிறரைத் தாங்குகிறோம் என்கின்றனர். மனிதர் எப்பொழுதும் எளிதான மாற்றுக்களையே தெரிந்துகொள்கின்றனர்.

❐

பவுல் மனந்திரும்பியபோது தனது உடன் யூதருக்காய் பெரிதும் பாரங்கொண்டான் (ரோ 9:1,2). இந்து அல்லது முகமதிய மார்க்கத்திலிருந்து வந்துள்ள இன்றையப் பிரசங்கிமாரில் பலரோ கிறிஸ்தவர்களையே சுற்றி சுற்றி வருகின்றனர். இந்தியாவில் 8.3% இந்துக்களென்றும், 10% முகமதியரென்றும் நாம் இன்னும் உணரவில்லையோ?

❐

பிரசங்கியாரின் திட்டத்தில் எத்தனைக் கிறிஸ்தவர் சேர்ந்தார்கள் அல்லது அவரது பத்திரிகைக்கு எத்தனை பேர் சந்தாதாரர் ஆனார்கள் என்பதல்ல. கிறிஸ்தவரல்லாதோர் எத்தனை பேர் சபையில் சேர்ந்தார்கள் என்பதே நற்செய்திக் கூட்டங்களின் வெற்றியை நிர்ணயிக்கும் அளவுமானியாகும்.

❐

பரிசுத்தவான்களே, சபைக்குள்ளேயே இருந்து பக்திவித்தியடைந்துகொண்டிருந்தால் போதாது. சமுதாயத்திற்குள் இறங்கி இன விருத்தியடைய வேண்டும். சபை கூடிவருவது மற்றவர்களைச் சபைக்குள் கூட்டிவருவதற்காகவே பிறிதொன்றம் பிரதானமல்ல.

❐

நாம் போதுமான அளவு விசுவாசியாதிருப்பதினாலேயே போதுமான அளவு சாட்சி பகராதிருக்கிறோம். அவிசுவாசம் நம்மை ஊமையாக்குகிறது (2 கொரி 4:13; லூக் 1:20).

❐

நட்பெனும் இடது கரமே ஐக்கியமெனும் வலது கரத்திற்கு முன்னோடியாகும். பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை அமைக்க இயேசு பாவிகளின் சிநே



கத்தை அணைத்துக்கொண்டார். தங்களுக்குள் சிநேகமில்லாத பரிசுத்தவான்களின் ஐக்கியம் மணமற்றது; வெளியிலிருப்போரோடு சிநேகமில்லாத அந்த ஐக்கியம் அழகற்றது.

❐

நாம் இயேசுவைப் பின்பற்றும்போது அவர் நம்மை மனிதரைப் பிடிப்போராக்குகிறார் (மத் 4:19). நாம் அவரை நேசிக்கும்போது அவர் நம்மை மனிதரை மேய்ப்போராக்குகிறார் (யோ 21:15-17). மனிதரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவதும், அவர்களை அவருக்குள் கட்டியெழுப்புவதும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குமுரிய இரட்டைப் பொறுப்பாகும். இந்த அழைப்பில் வெற்றியாயிருக்க நாம் கிறிஸ்துவைப் போல் மாறிக்கொண்டேயிருக்கவேண்டும்; அவர் மீதுள்ள பாசத்தில் ஊறிக்கொண்டேயிருக்கவேண்டும்.

❐

நற்செய்தி ஊழியத்திலும் சபை வாழ்விலும் நாம் பலம் குன்றியிருப்தேன்? பெரும்பாலான நமது சுவிசேஷக் கூட்டங்களில் செய்தி கொடுப்பது மேய்ப்பர்களும், பெரும்பாலான சபைகளை மேய்ப்பது சுவிசேஷகர்களுமாயிருப்பது ஒரு காரணமாயிருக்குமோ?

❐

சபை வளர்ச்சிக்கு ஒரு வழி: ஆலயத்தை ஒரு மாதம் பூட்டிவிடுங்கள். ஆலயத்தை மறுபடி திறக்கும்போது அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு புது நபரைக் கூட்டிவரவேண்டுமென்று சவாலிடுங்கள். உபத்திரவம் வந்தால் உங்கள் சபை அதைத் தாக்குப் பிடிக்குமா என்றும் இதன் மூலம் கண்டுகொள்வீர்கள்.

❐

மரியாளின் தைலப் பணத்தை எளியவருக்காகச் செலவிட்டிருக்கலமே என்றான் யூதாஸ்காரியோத். தரித்திரர் மீதுள்ள கரிசனையினாலல்ல, அவன் பணப் பையை வைத்திருந்த திருடனாயிருந்ததால் இப்படிச் சொன்னான் (யோ 12:6). அனாதை இல்லங்களையும் எளியவர் நலனுக்கான அமைப்புகளையும் ஏற்படுத்து வோர் தங்களது உள்ளான நோக்கங்களை சோதித்துப் பார்ப்பது நல்லது.

❐

நமது சபைகளில் தீயணைப்புப் படையினர் ஏராளம். அவர்களில் பெரும்பாலானோர் தலைமைப் பொறுப் புகளில் இருக்கின்றனர். ஆவியின் அக்கினி எரியத் துவங்கியதும் அணைத்துவிடுவர்! இவர்களது ஆச னங்களுக்குக் கீழ் நாம் கொஞ்சம் நெருப்பு மூட்டி னாலென்ன?

❐

சிறையிலடைக்கப்பட்டபோது பேதுரு குறட்டை விட்டுத் தூங்கினான்; பவுல் குரலெழுப்பித் துதித் தான். பேதுரு சமாதானமாயிருந்தான்; பவுல் சந்தோ ஷமாயிருந்தான். இன்னலும் இக்கட்டுமான சூழல் களில் சும்மாயிருக்கவும் சுகித்திருக்கவும் அவர்கள் கற்றிருந்தனர். தான் ருசித்தவர் யாரென்று பேதுரு அறிந்திருந்தான்; தான் விசுவாசித்தவர் யாரென்று பவுல் அறிந்திருந்தான் (1 பேது 2:3,2; 2 தீமோ 1:12).

❐

தேவன் நம்மைப் பலவிடங்களுக்கு எடுத்துச்சென்று பல்வேறு சூழல்களில் வைப்பது தமது தரிசனங் களைத் தருவதற்காகவே. அதற்காகத்தான் எசேக்கி யேலை ஒரு நதிக்கும், மலைக்கும், பட்டணத்திற் கும், யோவானை ஒரு தீவுக்கும் எடுத்துச் சென்றார். உங்கள் கண்களும் காதுகளும் எப்பொழுதும் திறந்



திருக்கட்டும்.

❐

ரோமன் கத்தோலிக்கர் பெத்லகேமுக்கும் கல்வாரிக்கு மிடையே நின்றுவிட்டனர். பெந்தெகொஸ்தேயல் லாத புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர் கல்வாரிக்கும் பெந் தெகொஸ்தேக்கும் இடையே நின்றுவிட்டனர். பெந்தெகொஸ்தேயினர் பெந்தெகொஸ்தேக்குப் பின்னர் எங்கோ நின்றுவிட்டனர். முசுக்கட்டைச் செடிகள்மீது அசையும் சத்தம் கேட்கிறது. முன் செல்லும் நாளிதுவே!

❐

சுற்றுவட்டாரச் சுவிசேஷப்பணியின் விரிவாக்கமே தொலைவிட மிஷனரிப் பணியாகும். எருசலேமில் ஆத்துமாதாயம் செய்யாதோருக்குச் சமாரியா செல்ல என்ன அருகதை? உள்ளூரில் ஓணான் பிடிக்காதவன் அசலூரில் ஆனை பிடிப்பதெப்படி?

❐

தொழிலைத் தொழுகைக்கும், தொழுகையைத் தொழிலுக்கும் பதிலாக்கவேண்டாம். வேலை செய்ய வேண்டிய நேரத்தில் வேலை செய்யுங்கள்; ஜெபிக்க வேண்டிய நேரத்தில் ஜெபியுங்கள். அவிசுவாசிகள் தொழிலையே தொழுதுகொள்ளும் இக்காலத்தில் விசுவாசிகள் தொழுகையையே தொழுதுகொள்ளத் துவங்கிவிடக்கூடாது.

❐

யூதாசுக்கு 30 வெள்ளிக்காசுகள் இயேசுவைவிட அருமை; மரியாளுக்கோ 300 வெள்ளிக்காசுகளை விட தனது ஆண்டவரே அருமை. அவன் காட்டிக் கொடுத்து 30 காசுகள் வாங்கினான். அவளோ கல் லறைக்காக 300 காசுகள் கொட்டினாள். ‘‘ஆராய்ந்து

பாரும் தேவனே, நான் சேவிப்பது உம்மையா, பணத்தையா?''

❒

பிரசங்க நண்பரே, உங்கள் கரிசனை மக்களைப் பரவசப்படுத்துவதா, பரிசுத்தப்படுத்துவதா? வெறுமனே உணர்ச்சிவச வார்த்தைகளை அள்ளிக் கொட்டுகிறீர்களா அல்லது மக்களுக்கு உன்னதத்திலிருந்து அருள் வரங்களைக் கொண்டுவருகிறீர்களா? கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் உங்கள் சபையார் உங்களுக்கு வெட்கமாயல்ல, கிரீடமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

❒

''கவலை வேண்டாம்'' என்ற செய்திகளை அளவுக்கு மீறிக் கேட்டதால் ஆத்துமாக்களைக் குறித்த பாரமும் நமக்குக் குறைந்துவிட்டது. ''பயம் வேண்டாம்'' என்ற செய்திகளை அடிக்கடிக் கேட்டதால் ஆண்டவரைக் குறித்த பயமும் நம்மில் மறைந்துவிட்டது. உணர்த்துதலும் சவாலுமின்றி வெறுமனே ஆறுதல் செய்திகளையே கொடுக்கும் தீர்க்கதரிசிகள் சமநிலை இழந்துவிட்டனர் (1 கொரி 14:3; எபி 4:1).

❒

தேவன் யோசுவாவை நோக்கி, ''நீங்கள் இந்த மலை நாட்டைச் சுற்றித் திரிந்தது போதும்; வடக்கே திரும்புங்கள்'' என்றார் (உபா 2:3). ''நீங்கள் தமிழகத்தையும் கேரளத்தையும் சுற்றித் திரிந்தது போதும்; வடக்கே திரும்புங்கள்'' என்றே தமிழ்ப் பிரசங்கிமாருக்கும் மலையாளப் பிரசங்கிமாருக்கும் ஆவியானவர் சொல்லுகிறாரென்று நான் விசுவாசிக்கிறேன்.

❒

எகிப்தில் காலால் நீர் பாய்ச்சினார்கள்;காணான்



தேசமோ வானத்தின் மழைத் தண்ணீரைக் குடித்தது (உபா 11:10,11). வெறுமனே மனிதனது திறமையால் செய்யப்படும் ஊழியத்திற்கும், உன்னதத்திலிருந்து ஊற்றப்படும் ஆவியின் வல்லமையால் செய்யப்படும் ஊழியத்திற்குமுள்ள வேறுபாட்டை இது எவ்வளவு அழகாய்ச் சித்திரிக்கிறது!

❒

ஒருவருக்கும் தெரியாத இடத்தில் தேவன் மோசேயைப் புதைத்தார். கல்லறையே தேவையில்லாதபடி தேவன் எலியாவை பரலோகத்திற்குக் கொண்டு போய்விட்டார். இவ்விதப் பரிசுத்தவான்களின் கல்லறைகள்மீது பேதுரு போன்ற அப்போஸ்தலரும் நினைவாலயங்கள் கட்டிவிடுவரென்று தெரிந்ததென்னவோ தேவன் அப்படிச் செய்ததற்குக் காரணமாயிருக்கலாம் (உபா 34:6; 2 இரா 2:11; மாற் 9:5,6). விசுவாசிகளே, விக்கிரகாராதனைக்கு விலகியோடுங்கள்!

❒

தேவ மக்களை ஆளவும் தேவாலயத்தைக் கட்டவும் தனது மகனை நியமிக்கையில் தாவீது மக்களை நோக்கி, ''என் குமாரனாகிய சாலொமோன் இன்னும் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்'' என்றான் (1 நாளா 29:1). இன்றோ அநேக மேய்ப்பரும் பிரசங்கிமாரும் தங்கள் பிள்ளைகளை ஊழியத்தில் தங்கள் வாரிசுகளாக நியமிக்கையில் அவர்களது வரங்களையும் திறமைகளையும் மிகைப்படுத்திப் பேசுகின்றனர். நிறுவியவர்களின் காலத்திற்குப்பின் ஊழியங்கள் பல சீர்குலைந்துபோவதற்கு இது ஒரு காரணமாகும்.

❒

தேவன் திரும்ப அசைவாடுகிறாரென்று நாம் பிரசங்

கிக்கிறோம். பாடுகிறோம். அவர் எப்பொழுதாவது தூங்கிக்கொண்டு சும்மாயிருந்தாரோ? (யோ 5:17). ''நாம்'' அவரோடு அசைந்து முன் செல்லுகிறோமா என்பதுதான் கேள்வி. நாம் ஏராளம் இடங்களுக்குச் செல்லுகிறோம். ஆனால் இடம் பெயரவேமாட்டோம்.

❒

கிறிஸ்து கல்லறையில்கூட இல்லை; நாமோ இன்னும் அவரைச் சிலுவையில்தான் தொங்கவிட்டிருக்கிறோம். அவர் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறாரென்று அறியும்போதுதான் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை நாம் அனுபவிக்க முடியும்.

❒

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமே புதிய ஏற்பாட்டின் மிகப்பெரிய வாக்குத்தத்தமாகும். அதுதான் பிதாவின் வாக்குத்தத்தம் என்று இயேசு ஒருமையில் குறிப்பிட்டார். எனவே இந்த வரமானது விவாதத்திற்கும் அலசிப் பார்க்குதலுக்கும் உரியதல்ல; விசுவாசத்திற்கும் அனுபவத்திற்கும் உரியதாகும்.

❒

அன்றைய பிரசங்கிமார் இயேசுவின் நாமத்திற்காக அவமானத்தைச் சகித்தார்கள்; இன்றைய பிரசங்கிமாரோ இயேசுவின் நாமத்தில் அந்தஸ்தைச் சுகிக்கிறார்கள். நாம் வேறொரு இயேசுவைப் பிரசங்கிக்கிறோமோ?

❒

பேதுரு அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும்போதுகூட சிறைச்சாலைக் கதவுகள் அற்புதமாய்த் திறந்தன. ஆனால் மரியாளின் வீட்டுக் கதவையோ அயராது தட்டிக்கொண்டிருந்தபோதுதான் உள்ளிருந்தோர் அவனுக்குத் திறந்தனர். வேறு வழியில்லை எனும்



வேளைகளில்தான் தேவன் அசாதாரணமான அற்புதங்களைச் செய்கிறார். எனவே, எல்லாம் உங்கள் மீதுதான் சார்ந்துள்ளதென்று எண்ணிக்கொண்டு எதையும் செய்யுங்கள். எல்லாம் தேவன்மீதுதான் சார்ந்துள்ளதென்று எண்ணிக்கொண்டு எதற்காகவும் ஜெபியுங்கள்.

❒

பெண்களும் இளைஞரும் சபையில் இரண்டாந்தரக் குடிகளாகக் கருதப்படுகின்றனர். இவ்விரு கூட்டத்தாருக்கும் சபைத் தலைவர்கள் சாதகமான செய்திகள் கொடுத்து, அவர்களை ஊழியத்தில் தாராளமாக ஈடுபடுத்தாவிடில் எதிரிக்குத்தான் இலாபம்.

❒

புதிய உடன்படிக்கையில் தேவன் இடங்களைப் பரிசுத்தப்படுத்துவதோ, பொருட்களை அபிஷேகிப்பதோ கிடையாது. மக்களையே பரிசுத்தப்படுத்துகிறார், அபிஷேகிக்கிறார். கடைசி நாட்களில் ''மாம்சமான'' யாவர் மீதும் ஆவியை ஊற்றுவேன் என்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறாரே.எனவே இன்று எந்தவொரு இடம், கட்டிடம் அல்லது பொருள்மீது ஆன்மீகப் புனிதம் உண்டென்பது விக்கிரகாராதனையேயன்றி வேறல்ல.

❒

பரலோகக் காரியங்களை நினைத்துக்கொண்டிருப்பது அபாரம்; அதே வேளையில் பூலோகத்தில் கிறிஸ்தவனாய் நடந்துகொள்ளவேண்டியது அவசியம். தேவனது சிங்காசனம் வானத்திலிருந்தாலும் அவரது பாதங்கள் பூமியில்தானே இருக்கின்றன!

❒

சில சபைகள் இருட்டுக் கிடங்குகள் போலிருக்கின்றன. அங்கு சூரிய ஒளியோ, மழைத்துறலோ,

தென்றல் காற்றோ கிடையாது. மூச்சுத் திணறலுக்குத் தப்பி இவ்வித ஐக்கியங்களை விட்டு வெளியோறு வோரைக் குற்றம் சாட்டவேண்டாம்.

❐

குருடர் கேட்கிறார்கள்; செவிடர் காண்கிறார்கள்; ஊமையர் நடக்கிறார்கள்; முடவர் பேசுகிறார்கள். தம்பட்டம் அடித்துக்கொள்ளும் சுகமளிக்கும் கூட்டங் கள் பலவற்றில் இது என்னவோ உண்மைதான்! ''அற்புத அடையாளங்களின் பலத்தினால் கிறிஸ்து என்னைக் கொண்டு நடப்பித்தவைகளைச் சொல் வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணி வதில்லை'' என்றான் பவுல் (ரோ 15:18,19).

❐

இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருப்பது அவருக் காய்ப் பாதங்களால் அலைவதைவிட முக்கியம். ஆனால் முதற்செயல் அடுத்ததற்கு நடத்தாவிடில் நாம் எதையுமே சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றே சொல்லவேண்டும்.

❐

ஆலயத்திற்கு வெளியே கோடிகள் அழிகின்றன. மந்தைக்குள் பத்திரமாயிருக்கும் ஆடுகளைவிட தொலைந்த ஆடே முக்கியமென்றார் பிரதான மேய்ப்பர். எனவே மிஷனரிச் சிந்தையில்லாத ஆயர் உண்மையான மேய்ப்பரல்ல.

❐

சரியான தீர்க்கதரிசனம் என்று பகுத்தறிவது எங்ஙனம் என்று அடிக்கடி என்னிடம் கேட்கிறார்கள். எனது எளிய பதில்: மரமானது அதின் கனியினால் அறியப் படும்; வரமானது அதின் விளைவினால் அறியப் படும்.



❐

நமது நாவைக் கட்டுப்படுத்துவது நவநாவுகளில் களிப்பதைவிட முக்கியம். இல்லையேல் பெற்ற வல்லமையெல்லாம் கசிந்துவிடும். கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் அந்நிய பாஷைகளல்ல, சொந்த வார்த்தைகளே நியாயந்தீர்க்கப்படும். நான் தினமும் நவநாவுகளில் தேவனோடு கொஞ்சு கிறேன்; ஆனால் எனது நாவை அடக்க கேவி நாடி தேவனைக் கெஞ்சுகிறேன்.

❐

தீர்க்கதரிசிகளின் நாட்களில் மக்கள் தங்கள் உள்ளங் களைக் கிழிக்காவிட்டாலும் தங்கள் உடைகளையா வது கிழித்தனர். நாமோ இரண்டும் செய்வதில்லை. உள் மாற்றமில்லாத புறச்செயல்களைக் கண்டிப்பது சரிதான்; ஆனால் எல்லாவற்றையுமே குறைகூறிக் கொண்டிருந்தால் மனம் வருந்துதலும் மனம் திரும்பு தலும் நமக்கு இல்லாமலே போய்விடும். எச்சரிக்கை!

❐

இயேசு தண்ணீரை ரசமாக்கினார்; பிரசங்கிமாரோ ரசத்தைத் தண்ணீராக்குகின்றனர். புலால் அல்ல, பாலுணவு கொடுக்கவேண்டியிருக்கிறதே எனப் பவுல் அன்ற கொரிந்தியருக்காய்ப் புலம்பினான். இன்றோ கிறிஸ்தவர்கள் பாலில் தண்ணீர் ஊற்றிக் கடைந்துவிட்டுக் கொடுக்கச் சொல்கின்றனர். எனது கேள்வி: மக்களது இருக்கை மட்டத்திற்குப் பிரசங்க பீடத்தை இறக்கவேண்டுமா, அல்லது இருக்கை களைப் பிரசங்கபீட உயரத்திற்குத் தூக்கவேண் டுமா?

❐

உயிரற்ற பழங்காலச் சபைகளின் தலைவர்களே, உலகெங்கும் தேவன் எழுப்பிவரும் சிறு குழுக்கள்,

ஐக்கியங்களை அற்பமாய் எண்ணாதீர்கள். ''செத்த சிங்கத்தைவிட உயிருள்ள நாய் மேல்!'' என்பது நினைவிருக்கட்டும்.

❒

ஆவிக்குரிய வரங்களை தாராளமாய் அப்பியாசித்துக் கொண்டிருந்த ஒரு சபைக்குத்தான் பவுல் ஒழுங்கு முறைகளை எழுதினான் (1 கொரி 1:48; 14:12). நவநாவுகள், தீர்க்கதரிசனம் போன்ற துவக்க வரங்கள்கூட வெளிப்படாத ஒரு கூட்டத்திற்கு வரங்களின் துர்ப்பிரயோகத்தைப் பற்றிப் பேசுவது எத்தனை மடமை!

❒

தான் சென்ற பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிய ஓநாய்கள் வரும் என்று பவுல் முன்னறிவித்தான் (அப் 20:29). தான் செத்தபின் மந்தையை திசைதிருப்பும் வஞ்சக ஊழியர் வருவர் என்று பேதுரு முன்னெச்சரித்தான் (2 பேது 1:14; 2:1,2). இரண்டாம் வரிசைத் தலைவர்களின் பொறுப்பு எத்தனை பெரியது?

❒

தேவன் நம்மோடு பேச நாம் நேரம் எடுக்காவிடில் அவர் நம் மூலம் பேச நாம் எதிர்பார்க்க முடியாது. நாம் தேவனோடு பேச நேரம் செலவழிக்காவிடில், நாம் அவருக்காய் பேச செய்தியிருக்காது. தனி ஜெபத்திலும் வேதத் தியானத்திலும் ஒழுங்கில்லாதோர் அம்பலத்தில் வெட்கமடைவர்.

❒

ஒவ்வொருவனும் தனக்கும் அதே வேளையில் மற்றவர்களுக்கும் பொறுப்பானவன் (கலா 6:2,5). தனது வாழ்வையும் அலட்சியப்படுத்தாது, பிறரது தேவைகளிலும் அக்கறை கொள்பவனே சமநிலைக் கிறிஸ்தவன்.



❒

நல்ல மேய்ப்பர்கள் பசும்புல் இருக்குமிடங்களிலெல்லாம் மந்தையை மேய விடுவர். ''உள்ளும் புறம்பும்'' சென்றுவரும் சிலாக்கியம் அந்த ஆடுகளுக்குண்டு (யோ 10:9). ஆனால் தங்கள் சபையினர் வெளியேயிருந்து ஒன்றும் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பார்களானால், ஆயர்கள் கொழுத்துக்கொண்டே போவார்கள். ஆடுகளோ மெலிந்துகொண்டேயிருக்கும்.

❒

கிறிஸ்துவையும் அவரது சொற்களையும் எதிர்க்கிறவன் அந்திக்கிறிஸ்து. பரிசுத்த ஆவியையும் அவரது செயல்களையும் எதிர்ப்பவன் அந்திப் பரிசுத்தாவி. உலகில் அநேக அந்திக்கிறிஸ்துக்கள் இருப்பதுபோல் சபையில் ஏராளம் பரிசுத்தாவிகள் இதுருக்கின்றனர். முதல் கூட்டத்தைவிட இரண்டாம் கூட்டமே தேவனது ஊழியத்திற்குப் பெரும் பாதகம்.

❒

குழுந்தைப் பருவத்திலிருந்து முழு வளர்ச்சிக்குத் தேவ மக்களை எடுத்துச் செல்லவே தலைவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர் (எபே 4:11-16). ஆனால் அவர்களே மக்கள் செய்யவேண்டிய ஜெபத்தை அவர்களுக்காக செய்துகொண்டும், அவர்களே மக்கள் எடுக்கவேண்டிய தீர்மானங்களை அவர்களுக்காக எடுத்துக்கொண்டும், மக்கள் தோல்வியடைந்துவிடாதபடி கவனிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருப்பார்களானால், மக்கள் குழந்தைப் பருவத்தை என்றுமே கடக்கமாட்டார்கள். இல்லாவிடில் நமது சபைகளில் 10 வயது, 30 வயது, 50 வயது பாலகர்கள் நிறைந்திருப்பதேன்?

❐

விசுவாசத்தில் வளர எல்லாருக்கும் விருப்பம்; தியாகத்தில் வளர விரும்புவோரோ மிகச் சொற்பம். இஸ்மவேலை அனுப்பிவிடுவதில் ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தது, ஈசாக்கை பலியிடுவதற்கு அவனை அழகாய்ப் பக்குவப்படுத்திற்று. விசுவாசமானது தியாகத்தைக் கிளறிவிடும். தியாகமானது விசுவாசத்தைப் பலப்படுத்தும்.

❐

மூன்று மணி நேரம் இமையசையாமல் படம் பார்க்க ஆயத்தம். ஒரு மணி நேரம் ஜெபத்தில் விழித்திருக்கச் சொன்னாலோ மனிதனால் நெடுநேரம் ஒன்றில் கவனம் செலுத்த முடியாதென மனோதத்துவம் பேசுகிறோம். ஆண்டவர் இன்னும் எவ்வளவு காலம் நம்முடன் பொறுமையாயிருப்பாரோ?

❐

கிறிஸ்துவை இரட்சகர், குணமாக்குகிறவர், அபிஷேகிக்கிறவர் எனப் பிரசங்கிப்பது ''பூரண'' சுவிசேஷம். ஆனால் கிறிஸ்துவை அப்போஸ்தலர் என்று சுட்டிக்காட்டி மக்களை மிஷனரிப் பணிக்குச் சவால் விட்டழைப்பது ''பரிபூரண'' சுவிசேஷமாகும்.

❐

சமாரியா வழியாய்ப் போகக்கூடாதென்று வேண்டுமானால் மூன்று நாட்கள் கூடுதலாக நடந்தாலும் வேறு வழியாய் செல்வது யூதர் வழக்கம். பெருமைக்கும் வெறுப்புணர்வுகளுக்கும் மரித்து, இயேசுவைப் போல் சமாரியாவை ஊடுருவிச் செல்லாவிடில், முழுக் கிராமங்களின் விளைந்த பலனை நாம் அறுக்க முடியாது.

❐



சிலுவை சுமந்து இயேசுவைப் பின்பற்றுவதற்குப் பதிலாக வெறுமனே சிலுவை அணிந்து உலகைப் பின்பற்றுகிறோம். இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை நம் அறியாதிருப்பது அதிலும் சோகம்.

❐

பயன்படுத்தப்படாமல் அடிக்கடி விசையேற்றப் பட்டுக்கொண்டிருக்கும் மின்கலம் சீக்கிரம் கெட்டுப் போகும். அப்படியே கூட்டந்தோறும் நிரப்பப்பட்டும் பணி செய்யாத கிறிஸ்தவர் சீக்கிரம் பட்டுப்போவர்.

❐

பெந்தெகொஸ்தே நாளைப் பேதுரு கடைசி நாட்களென அடையாளங்கண்டான். ஏறத்தாழ 40 ஆண்டுகட்குப்பின், அக்காலத்தை யோவான் கடைசி மணி வேளை என்றான் (1 யோ 2:18). அப்படியானால், 2000 ஆண்டுகட்குப்பின் நாம் வாழும் இக்காலம் கடைசி நிமிடங்கள்தானே? எனவே, இதுவரையில்லாத ஆவியின் அருள்மாரியையும், ஆத்தும அறுவடையையும் நாம் எதிர்பார்க்க வேண்டுமல்லவா?

❐

யோவான் எழுதியுள்ளபடி, தேவாலயத்தைச் சுத்தம் பண்ணுகையில், இயேசு ஆடு மாடு விற்கிறவர்களைத் துரத்தி, காசுக்காரரின் பலகைகளைக் கவிழ்த்துப்போட்டார். புறா விற்கிறவர்களிடம் வந்தபோதோ, ''இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள்'' என்று கேட்டுக்கொண்டார் (யோ 2:14-16). தலைவர்கள் பாரபட்சமின்றி இருக்க வேண்டும்; ஆனால் அதே வேளையில் ஒவ்வொருவரோடும் ஒவ்வொரு விதமாய் இடைபடவேண்டும்.

❐

சாராளை விட்டு ஆகார் ஓடியபோது தேவன் அவளைத் திரும்ப அவளது எஜமாட்டியிடம் அனுப்பினார். ஆனால் பதினாறு ஆண்டுகள் கழித்து அதே எஜமாட்டியிடமிருந்து ஆண்டவரே ஆகாரை அனுப்பிவிட்டார். தேவனுக்கு முன்னால் ஓடிவிடாமலும், பின்னால் தங்கிவிடாமலும், அடுத்த கட்டளை அவர் கொடுக்கும்வரை அவர் வைத்திருக்கும் இடத்தில் இருக்கக் கற்றுள்ளோர் பாக்கியவான்கள்.

❒

யோசேப்பைக் குறித்து அவன் ''நீரூற்றண்டையிலுள்ள கனி தரும் செடி'' என்று சொல்லப்பட்டது (ஆதி 49:22). ஆச்சரியவிதமாக, பல்லாயிரமாண்டுகள் கழித்து, அவனது கிணற்றண்டையிலேயே விபச்சாரி ஒருத்தி மனந்திரும்பி உடனே கனி தரும் சாட்சியானாள் (யோ 4:5,616-18,39). யோசேப்பு வாலிபனாயிருக்கையில் விபச்சாரத்திற்கு விலகியோடியது நினைவிலிருக்கிறதா?

❒

சமுதாயத்தில் ஒரு பிரசங்கியார் ஏற்படுத்தியுள்ள அசைவை அவர் இழுக்கும் திரளை வைத்து அளக்க முயல்வது தவறு. தாங்கள் தனி நபர்களுக்கோ, சிறு குழுக்களுக்கோ பேசிய அல்லது எழுதியவற்றினால் நிரந்தரமாய் மக்களது மனதைப் பாதித்துள்ள, ஆனால் புகழ் பெறாத, மனிதரால் சரித்திரம் நிறைந்திருக்கிறது. எனவே நட்சத்திரங்களாய் மாறிவிடவேண்டுமெனத் தங்கள் கோட்பாடுகளையும் உபதேசங்களையும் சமரசம் பண்ணிச் சத்தற்றதாக்கிவிடக்கூடாதென இளம் ஊழியருக்கு அறிவுறுத்துகிறேன்.

❒

கேட்பதோடு நின்றுவிடுவது சரியான ஜெபமாகாது. தேடுதலும் தட்டுதலும் தொடரவேண்டும். அன்றன்



றுள்ள அப்பத்திற்காய்த் தேவனைக் கேளுங்கள்; அடுத்து வேலைத் தேடுங்கள், வாய்ப்புகள் எனும் கதவுகளைத் தட்டுங்கள். மனிதனின் பொறுப்புக்கு தேவனது வல்லமை மாற்றாகாது. ஜெபமின்மையைப் போலவே செயலின்மையும் பாவமே.

❒

''நான் என்ன செய்யவேண்டும்?'' என்று ஒரு வாலிபன் கேட்டான். ''நீ வாசித்திருக்கிறது என்ன?'' என்று இயேசு அவனைத் திருப்பிக் கேட்டார். வேதத்திற்கு நேராக மக்களைத் திருப்பி அவர்களையே அதை ஆராய்ந்து பார்க்கப் பழக்குவிப்பதே பிரசங்கிமாரின் பிரதான கடமையே ஒழிய, தீர்க்கதரிசனம் தீர்க்கதரிசனம் என்று சொல்லி மக்கள் பிரசங்கிமாரையே ஒட்டிக்கொண்டிருக்கச் செய்துவிடக்கூடாது.

❒

நீ தசமபாகம் கொடாவிட்டால் நீ ஒரு திருடன். கணக்கு காட்டாத மேய்ப்பருக்கோ பிரசங்கியாருக்கோ நீ தசமபாகம் கொடுத்தால் நீ அவரைத் திருடனாக்குகிறாய். ஊழியருக்கும் மக்களுக்கும் தேவன் தரும் செய்தி: ''இனித் திருடாதிருங்கள்!''

❒

பிசாசானவனோடு போராடும்போது அனைத்துப் படைக்கலங்களுக்கும் மேலாக விசுவாசத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும் (எபே 6:16). பரிசுத்தவான்களோடு ஐக்கியப்படும்போது அனைத்துப் பண்புகளுக்கும் மேலாக அன்பைச் செயலாற்றவேண்டும் (1 கொரி 13:13). விசுவாசமானது தேவனது வல்லமையை வெளிக்காட்டுகிறது. அன்பானது தேவனது கனிவை வெளிப்படுத்துகிறது. இரண்டிலும் வளருவதே நம்மைப் பலமுள்ள கிறிஸ்தவர்களாக்கும்.

❒

சுவிசேஷகர்கள் அவிசுவாசிகளைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தினால் போதாது; விசுவாசிகளைக் கிறிஸ் தற்றோரிடம் வழிநடத்தவும் வேண்டும். துவக்கத் தில் இயேசு, ''வாருங்கள்!'' என்றார். பின்னர், ''செல்லுங் கள்!'' என்றார்.

❒

துர்வுபதேசங்கள் அதிவிரைவில் பரவும். பாதி உண் மைகளும் உண்மையல்லாதவைகளும் எப்பொ முதுமே கூடுதல் கவர்ச்சியாக இருக்கும் (ஆதி 3:4,5). வசனத்தைக் கபடமில்லாமல் பிரசங்கிப்பதிலிருந்து வழிவிலகிப் புகழேனியில் ஏற இங்குதான் ஊழிய ருக்குப் பெரும் சோதனை வரும்.

❒

உங்கள் ஜெபங்களைக் குறித்து எச்சரிக்கை! தேவன் பதில் கொடுத்துவிடுவார்! பிதாவை இயேசு வேண் டிக்கொண்டிருந்தால் அவர் தூதர் பட்டாளங்களைக் கெத்செமனேக்கு அனுப்பியிருப்பார். அது தேவனது அனுமதிச் சித்தமாய்த்தான் இருந்திருக்குமே தவிர வசனத்தில் வெளிப்பட்டுள்ள அவரது பரிபூரணச் சித்தமாயிருந்திருக்காது (மத் 26:53,54). இதோ, இஸ்ரவேலரைக் குறித்துச் சொல்லப்பட்டதொரு துக்கமான கூற்று: ''அவர்கள் கேட்டதை அவர்க ளுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்'' (சங் 106:15).

❒

வேதத் பகுதியொன்று விளங்கிக்கொள்ள கடின மாயிருந்தாலும் வாசித்துக்கொண்டேயிருங்கள். அப்பகுதியை உங்களுக்கு விளக்கிச் சொல்ல ஒரு பிலிப்புவை எப்பொழுது உங்களிடம் அனுப்பவேண் டுமென்று பரிசுத்த ஆவியானவருக்குத் தெரியும்.



❒

தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்டவர்; ஆனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட யாவும் தேவனிடமிருந்து வருபவை என்று சொல்லிவிட முடியாது. அப்படியே, வேதத்திற்கடுத்த யாவும் ஆன்மீகமானது; ஆனால் ஆன்மீகமான யாவும் வேதத்திற்கடுத்தது என்று சொல்லிவிட முடியாது. இந்த வேறுபாடுகளை அறியாத கிறிஸ்தவன் வஞ்சிக்கப்படலாம்.

❒

நீ பரலோகம் உண்டென்று விசுவாசித்தால், பரிசுத்த வான்களோடு மகிழ ஆலயத்திற்கு ஒழுங்காய் ஓடு வாய். நரகம் உண்டென்று விசுவாசித்தாலோ, பாவி களை மீட்க ஆலயத்திற்கு வெளியே விரைவாய். பரலோகத்தைவிட நரகத்தைப் பற்றியே இயேசு அதிகம் பிரசங்கித்தார், தெரியுமா?

❒

மிஷனரிப் பணிக்குக் கொடுப்பது நமது பொறுப்பு மட்டுமல்ல,சிலாக்கியமும் ஆகும். கொடுப்பதை வெறும் கடமையென நினைத்தால் கணக்கப் பார்ப் போம்; அதைக் களிப்பாய்க் கருதினாலோ, உற்சாக மாய்ச் செய்வோம். ஒன்று பிரமாணம், அடுத்தது பிரியம்.

❒

உபதேசக் குழப்பங்களும் மாறாட்டங்களும் பாரம் பரியச் சபைக் கிறிஸ்தவர்களைவிட ஆவிக்குரிய சபையினரிடம் அதிகம். சபைப் பிதாக்களின் விசு வாசப் பிரமாணங்களைக் கிளிப்பிள்ளைப்போல் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்களேயென முதல் வகையினரை ஒரு காலத்தில் குறை கூறியிருக் கிறேன். ஆனால் அடிப்படை உபதேசக் கூற்று

களையும் அதையடுத்த ஜெபங்களையும் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதா லேயே பலவித உபதேசக் காற்றுகளுக்கு தப்பியிருக் கின்றனர் என இப்பொழுது உணருகிறேன். ‘‘ஆண்ட வரே, நான் உளறியதை எனக்கு மன்னியும்!’’

❒

இயேசுவை இவ்வுலகிற்குள் கொண்டுவந்த மரி யாளை ரோமன் கத்தோலிக்கர் வணங்குகின்றனர். இயேசுவிடம் தங்களைக் கொண்டுவந்த பிரசங்கி மாரை புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர் வணங்குகின் றனர். இப்படி இரு சாராரும் தேவன் வெறுக்கும் விக்கிரகாராதனை செய்கின்றனர். நாம் மனந்திரும்ப மாட்டோமா?

❒

நம்மில் அநேகருக்கு தெரிந்த உபவாசம் வசனமாகிய பரலோக அப்பம் புசியாதிருப்பதேயாகும். சாப்பாட்டு வேளை வந்துவிட்டால் அவ்வளவு கட்டாயமாய்ச் சாப்பிடுகிறோம்; நமது ஆன்மாவைப் போஷிக்கவும் அதே ஒழுங்கு இருக்கக் கூடாதா? பொருளாதார ஆசீர்வாதத்தைக் குறித்தும், உடல் சுகத்தைக் குறித்தும் பேசுகிறோமே, ஆன்மாவோ வாடுகிறதே!

❒

கிறிஸ்தவ ஊழியருக்கு நான் அடிக்கடி சொல்லும் இரு ஆலோசனைகள்: ஒருபோதும் திருப்தியடை யாதீர்கள்; ஒருபோதும் தைரியமிழக்காதீர்கள். இன்னும் நன்றாகச் செய்யவும் ஆழமாகச் செல்லவும் முயலுங்கள்; திரும்பவும் முயற்சியுங்கள், விட்டு விடாதீர்கள்.

❒

சபையை இடித்துக்கொண்டிருந்த பவுல், அதைக்



கட்டுகிறவனானான். சரியான கோழையாயிருந்த பேதுரு துணிந்த சாட்சியானானான். ஆசனம் இச்சித்த யோவான் அன்பின் அப்போஸ்தலனானான். ஊழல் நிறைந்த வரி அதிகாரியாகிய சகேயு கொடைவள்ள லானான். நீங்கள் என்ன ஆகியிருக்கிறீர்கள்?

❒

கெத்செமனேக்குச் செல்கையில் பட்டயங்களை எடுத்துக்கொள்ளுங்களென்று தமது சீடருக்குச் சொன்னது இயேசுதான். ஆனால் பேதுரு தனது பட்டயத்தைத் துர்ப்பிரயோகம் செய்தபோது அவ னைக் கடிந்துகொண்டார். அப்படியே, ஆவிக்குரிய வரங்களையும் விளையாட்டுப் பொம்மைகளாகவும், நாம் பெருமையடித்துக்கொள்ள சாதனைகள் போல வும் தவறாகப் பயன்படுத்தலாம். ஆனால் வாழ்விலும் ஊழியத்திலும் வசனத்தை நிறைவேற்றுவதற்குச் சாதனங்களாகவே வரங்கள் தரப்பட்டுள்ளன (மத் 26:52,54).

❒

செத்தவர்களை எழுப்பும்படி இயேசு தமது சீடருக்குக் கட்டளையிட்டார். அந்தோ, மேய்ப்பர் பலர் தங்களது செத்த பிரசங்கங்கள், பாரம்பரியங்கள், மற்றும் செத்த சடங்குகளினால் உயிரோடிருக்கிறவர்களைச் சாகடிக் கிறார்கள். இப்படிச் சாகடிக்கப்பட்ட மக்கள் பணமும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்! செல்ல ஆட்டுக் குட்டிகளே, இந்தக் கசாப்புக் கடைகளுக்குத் தப்பி யோடுங்கள்.

❒

சபைக்குள்ளேயே பலர் கிறிஸ்துவுக்குமுன் தங்கள் முழங்கால்களை முடக்குவதோ, அவரது கர்த்தத்து வத்தை அறிக்கையிடுவதோ கிடையாது. இப்படி யிருக்க, வெளியே இருப்பவர்களிடம் அதை எதிர்

பார்ப்பது எப்படி? கிறிஸ்தவரிடையே அசாதாரண எழுப்புதல் இல்லாது கிறிஸ்தவரல்லாதவரிடையே அமோக ஆத்தும அறுவடை எதிர்பார்ப்பது நடைமுறையில் சாத்தியமல்ல. ''ஆண்டவரே, சபையை வளைத்து சமுதாயத்தை வளமாக்கும்'' என்ற இவான் ராபர்ட்சின் (1878-1951) ஜெபமே நமதாகட்டும்.

❐

கலிபோர்னியாவில் புமியதிர்வு ஏற்பட்டபோது மேலைநாடுகளின் ஆபாசப் படத்தொழில் மையத்தை தேவன் அசைத்துவிட்டார். இந்தியாவில் லாத்தூரில் ஏற்பட்ட நிலநடுக்கம் கீழைநாடுகளிலுள்ள விக்கிரகாராதனை மையத்திற்கு ஏற்பட்ட ஆட்டமாகும். ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் தூரக் கிழக்குப் பகுதியின் தொழில் மையத்தை உலுக்கிவிட்டது. மனிதன் எதையெல்லாம் குறித்துப் பெருமையடித்துக்கொள்ளுகிறானோ அதையெல்லாம் தேவன் தவிடுபொடியாக்கிக்கொண்டேயிருக்கிறார். அசைக்கப்பட முடியாதவைகள் மட்டுமே நிலைத்திருக்கும்படி அசைக்கப்படக்கூடியவைகள் யாவும் அசைக்கப்பட்டுவிடும்.

❐

''பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறீர்களா?'' என்று கேட்கும்போது சில ஆண்டுகட்குமுன் கிறிஸ்தவர் சிலர், ''வல்லமை கிடைத்திருக்கிறது; இன்னும் ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை'' என்பர். இப்பதில் இன்றோ, ''ஆவியைப் பெற்றுவிட்டேன்; இன்னும் வல்லமை கிடைக்கவில்லை'' என்று மாறியிருக்கிறது. இவை இரண்டுமே தவறு; ஏனெனில் இவை தேவ வசன உண்மைகளல்ல, நமது உணர்ச்சிகளைச் சாருவதின் விளைவாகும். பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தால் வல்லமையையும் பெற்றுவிட்



டோம் என்பதே சத்தியம் (அப் 1:8). கிறிஸ்துவுக்காகச் சாட்சிபகர புறப்பட்டுச் செல்லும்போதுதான் அவ்வல்லமையின் வெளிப்பாட்டை நாம் காண முடியும்.

❐

நீங்கள் அளவுக்கு மீறி சுகமளிப்புக் கூட்டங்களில் பங்குபெற்று, அளவுக்கு மீறி சுகமளிப்புப் பத்திரிகைகளைப் படித்துவந்தால் பூமிக்கடுத்த சிந்தனை, பொருளாசை, குறுகிய பார்வை, தன்னலம் ஆகிய நோய்களினால் பாதிக்கப்பட்டு சீக்கிரம் மரித்துவிடுவீர்கள். சுகமளிப்புக் கூட்டம் ஒன்றில் பங்குபெற்றால் குறைந்தது ஆறு மிஷனரிக் கூட்டங்களிலாவது பங்குபெறுங்கள்; அப்படியே ஒரு சுகமளிப்புப் பத்திரிகை வாசித்தால் குறைந்தது ஆறு மிஷனரிப் பத்திரிகைகளாவது வாசியுங்கள் என்று ஆலோசனை கூறுகிறேன். கர்த்தரது ஜெபத்திலுள்ள ஏழு விண்ணப்பங்களில் ஒன்றே ஒன்றுதான் உடலின் தேவையை அடுத்ததென அறிவீர்களா?

❐

நமக்குக் கூடுதல் தேவை வல்லமையல்ல, ஆனால் ஏற்கனவே இருக்கும் வல்லமையோடு புறப்பட்டுச் செல்வதற்கான தைரியமே; அப்படியே கூடுதல் வெளிப்பாடல்ல, ஆனால் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டவற்றிற்குக் கீழ்ப்படிதலே; கூடுதல் வரங்களல்ல, ஆனால் ஏற்கனவே பெற்றுள்ள வரங்களைப் பயன்படுத்துதலே. இந்த முக்கியத்துவ வரிசை இன்று மாற்றப்பட்டுள்ளதாலேயே சத்துரு புகுந்து விளையாடி நம்மைத் திசைதிருப்பிக்கொண்டிருக்கிறான்.

❐

நதிக்கரையில் இயேசு தேவனுக்குக் கீழ்ப்படிந்தபோது தேவ ஆவியானவர் அவர்மீது வந்தார்.

வனாந்தரத்தில் அவர் சாத்தானுக்குக் கீழ்ப்படிய மறுத்தபோது தேவ தூதர்கள் அவரிடம் வந்தனர். பரலோகம் ஒருபோதும் கீழ்ப்படிதலைக் கவனியாது விட்டுவிடாமல், எப்போதும் அதைக் கனப்படுத்தும்.

❒

நாம் பரிசுத்தவான்களாயிருக்கும்படி அழைப்பு பெற்றிருக்கிறோம்; படைவீரராயிருக்கும்படி ஆணை பெற்றிருக்கிறோம். போற்றிப் பாடுவதில் பரிசுத்த வான்களுக்கு ஆனந்தம்; போராடிப் பிடிப்பதில் படைவீரர்களுக்கு ஆர்வம். பரிசுத்தவான்களிடம் படையுணர்வு இல்லையேல் இறையரசு பரவாது; படைவீரர்களிடம் பரிசுத்தம் இல்லையேல் இறை யரசு பளிச்சிடாது. ஒரே வேளையில் பரிசுத்தவான் களாகவும் படைவீரனாகவும் இருப்பவனே வேதா கமக் கிறிஸ்தவன்.

❒

மற்றவர்களைக் குறித்துத் துர்ச்செய்திகளைப் பரப்பு கிறோம்; மன்னவனைக் குறித்த நற்செய்தியையோ பறைசாற்றுவதில்லை. முதலாவது குற்றம் பேசும் வரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது; இரண்டாம் குற்றம் பேசும் வரத்தைப் பயன்படுத்தத் தவறுவது. நாவு ஒரு நெருப்பு. அதைப் பயன்படுத்தும் விதத் தைப் பொறுத்து அது மக்களை உருவழிக்கும், அல் லது உருவாக்கும். எதைச் சொல்லியிருக்கக்கூடாது, எதைச் சொல்லியிருக்கவேண்டும் ஆகிய இரண்டிற் காகவும் நாம் நியாந்தீர்க்கப்படுவோம்.

❒

சிலாக்கியங்கள் அத்தனையும் பொறுப்புகளாம். பொறுப்புகள் அத்தனையும் சிலாக்கியங்களாம். சிலாக்கியங்களை அனுபவித்துவிட்டு பொறுப்பு



களை அகற்றிவிடுவது குழந்தைத்தனம். பொறுப்பு களை நிறைவேற்றுகையில் அவைகள் சிலாக்கியங் கள் என நினையாதிருப்பது குறுக்கொடிப்பு. பொறுப் புகளையும் சிலாக்கியங்களையும் சமநிலையில் பாவிப்பதே முதிர்ச்சி.

❒

கமிட்டிக் கூடுகைகளில் தகவல்களின் அடிப்படை யில் தர்க்கம் செய்கிறோம். ஜெபக்கூடுகைகளிலோ ஆவியானவரின் அகத்தூண்டுதலால் நடத்துதல் பெறுகிறோம். இரண்டும் தேவைதான்; ஆனால் முடிவான கட்டளைகள் சர்வ வல்லவரிடமிருந்தே வரவேண்டும் (நீதி 19:21).

❒

தென்னிந்தியாவில் வேதாகமப் பள்ளிகள், கல்லூரி களின் எண்ணிக்கை பல நூறுகளாகப் பெருகிவிட் டது; ஆனால் போதுமான மாணவரில்லை. அப்ப டியே, போதுமான அனாதைகளில்லாத அனாதை இல்லங்களுமுண்டு. பாதி அனாதை அல்லது இரு பெற்றோரும் இருக்கும் பிள்ளைகளையும் பல அனாதை இல்லங்களில் சேர்க்கத் துவங்கிவிட்டனர். சபை மேய்ப்பர்களும் பிரசங்கிகளும் டாலருக்கும் டச் மார்க்குக்கும் தங்கள் அழைப்பை விற்றுவிட்டதின் சோக விளைவே இது.

❒

பந்தி விசாரிப்புக்கு ஸ்தேவானையும் பிலிப்புவையும் தெரிந்தெடுத்ததை அவ்வளவு சரியென்று சொல்ல முடியாது. இப்பொறுப்புக்காக நியமிக்கப்பட்டதை யடுத்து உடனே அவர்களிருவரையும் வெளிப்பிர சங்க சுவிசேஷ வீரராய்க் காண்கிறோம். ஆம், நாம் தேவனுக்கு நம்மை முற்றும் அர்ப்பணித்து அமர்ந்

திருந்தால் எம்மனிதனும், எச்சங்கமும், எவ்வளவு பக்தியுடன் செயல்பட்டாலும், நம்மைக் குறித்த தேவ அழைப்பைப் பாழாக்க முடியாது.

❒

லேகியோன் போன்ற திரளான அசுத்த ஆவிகளை ஒருவரிடமிருந்து துரத்துவதைவிட ஆவியானவரால் நிறைந்த விசுவாசிகளைப் பிறர்க்கு சாட்சி கூறுவதற் காக கிளப்புவது மிகக் கடினம். சில வகைப் பிசாசுகள் உபவாசத்தினாலும் ஜெபத்தினாலுமேயன்றி புறப் பட்டுப் போகா. சில கிறிஸ்தவரும் ...

❒

பூமியின் கடைசி வரை செல்லுவோருக்கே அவர் களோடு உலகின் முடிவு வரை இருப்பதாக இயேசு வாக்களித்தார். அப்படியே, மிஷனரிப் பயணங்களில் தனது தேவைகளைச் சந்தித்த பிலிப்பிய சபை விசு வாசிகளுக்கே அவர்களது குறைவையெல்லாம் தேவன் நிறைவாக்குவாரெனப் பவுல் உறுதியளித் தான். பிசாசானவனோ தேவனது வாக்குத்தத்தங் களுக்கு அடிப்படையான நிபந்தனைகளை அறவே நமது கண்களுக்கு மறைத்துவிட்டு, அவரது வாக்கு களை மட்டும் உரிமைபாராட்டிக்கொண்டிருக்கும் பயனற்ற அப்பியாசத்திற்குள் நம்மைத் தந்திரமாய்த் தள்ளிவிட்டுவிட்டான்.

❒

சமைநிலைக் (balanced) கிறிஸ்தவன் என்றால் சமரசக் (neutral) கிறிஸ்தவன் என்று பொருள்படாது. எதை, எப்பொழுது, எவ்வளவு வலியுறுத்தவேண்டு மென அறிந்தவனே சமநிலைக் கிறிஸ்தவன். எந்தச் சத்தியத்தையும் அனுபவத்தையும் அவன் அளவுக்கு மீறி வலியுறுத்துவதில்லை. மாறாக, சமரசக் கிறிஸ்த



வனோ தைரியமோ, மன நிர்ணயமோ அற்றவன்; அவன் எங்குமே முன்னேறிச் செல்லுவதில்லை. உலகைப் பிரியப்படுத்துவதே அவனது நோக்க மாகையால் எப்பொழுதுமே நடுநிலையில் நின்று கொள்ளுவான். நமநிலைக் கிறிஸ்தவனோ வசனத் தின் மாதிரியையே தனது நோக்காகக் கொண்டுள் ளான். சமரசக் கிறிஸ்தவரால் இறையரசுக்கு நஷ்டம் தான். சமநிலைக் கிறிஸ்தவரோ இறைப்பணிக்கு எங்கும் பலமும் உறுதியும் அளிப்பர்.

❒

புதிய இடங்களில் மிஷனரிப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட பவுல் இன்னொருவரது அடித்தளத்தின்மீது கட்டுவதில் வெறுப்பு கொண் டான். நாமோ இன்னொருவர் கட்டிடத்தின்மீது ஒரு மாடியைக் கட்டவும் தயங்குவதில்லை. வேண்டு மானால் இன்னொருவரது கட்டிடத்தை இடித்தும் நமது கட்டிடத்திற்கு கட்டுமானப் பொருட்களைத் திருடவும் நாம் ஆயத்தம். மரபற்ற இப்பழக்கங்களை என்று நிறுத்துவோம்?

❒

அடிப்படைத் தலைமைத்துவத்திலேயே தோல்வி யுற்றுள்ள நாம் அதில் உயர் படிப்பைப் பற்றிப் பேசு வானேன்? நாம் தவறியுள்ள எளிமை, உண்மை, தியாகம் எனும் பாடங்களில் தேர்ச்சியடைய முத லாவது முயற்சிப்போம். அடிப்படைகளில் உண்மை யுள்ளவர்களாயிருக்கும்போதுதான் தேவன் நம்மை உயர் மட்டங்களுக்கு உயர்த்துவார்.

❒

தொண்ணூற்றொன்பது ஆடுகள் பத்திரமாயிருந்தன. ஒன்றுதான் காணாமற்போனது. ஆனாலும் காணாமற்

போனதை மேய்ப்பன் தேடிச் சென்றான். நமது சூழ்நிலையிலோ, ஒரு சதவீதம்தான் சபைக்குள்ளிருக்கிறது. தொண்ணூற்றொன்பது சதவீதமோ வெளியே தொலைந்து திரிகிறது. ஆனாலும் நாம் அவர்களைத் தேடிச் செல்லுவதில்லை. எனவே இன்று நமது தேவை நமது சிந்தையிலும் செயலிலும் ஒரு பெரும் புரட்சியே தவிர வெறும் எழுப்புதல் அல்ல.

❒

விசுவாசிகளனைவரும் தங்களது உடைமைகளை விற்றுப் பணத்தை அப்போஸ்தலரது பாதங்களில் வைத்தார்களென அப்போஸ்தலர் இரண்டாம் அத்தியாயத்தில் வாசித்தாலும், மூன்றாம் அத்தியாயத்தில் பேதுரு முடவனான பிச்சைக்காரனிடம், வெள்ளியும் பொன்னும் ''என்னிடத்திலில்'' இல்லை என்றான்! ஊழியப் பணங்களை வங்கியில் தங்களது ''சொந்தப் பெயரில்'' வைத்திருக்கும் பிரசங்கிமாருக்கும் சபை மேய்ப்பருக்கும் இங்கே அதிமுக்கியமான படிப்பினை உண்டு.

❒

நமது ஆதிப் பெற்றோருக்கு கண் திறப்பை வாக்குப் பண்ணிய சாத்தான் உண்மையில் அவர்களது கண்களைக் குருடாக்கிவிட்டான். இன்றைக்கும் அவன் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை மூலம் பல காரியங்களைக் கண் திறப்பவையாக விளம்பரம் செய்கிறான். ஆனால் நம்மை முழுக் குருடாராக்குவதே அவனது உள்நோக்கம்.

❒

சில சபைகள் மருத்துவமனைகள்தான்; வாராவாரம் மேய்ப்பர் கொடுப்பதெல்லாம் ஆறுதல் செய்திதான். இன்னும் சில சபைகள் சிசுக்கள் இல்லங்களாம்;



அங்கத்தினர் எப்பொழுதுமே குழந்தைகளாகத்தான் இருப்பர். வேறு சில சபைகள் யுத்தக் களங்களாம்; அங்கு எப்பொழுதுமே உள்நாட்டுச் சண்டைகள் தான். இன்னும் சில சபைகள் வயோதிபர் இல்லங்களாம்; அங்கு பாரிம்பரியங்களே கும்பிடப்படும். மாறாக, பரிசுத்தவான்களைப் படைவீரராகப் பயிற்றுவித்து, பிசாசை வென்று அவனது சிறையிலுள்ளோரை விடுவிக்க, அவர்களை வெளியே அனுப்பிக்கொண்டிருக்கும் இராணுவப் பயிற்சி நிலையங்களான சில சபைகளும் உண்டு. நீங்கள் எந்தச் சபை?

❒

தட்டுமுட்டுச் சாமான்கள் செய்வதற்கு தச்சன் பயன்படுத்தும் ஆயுதங்களைப் போன்றவையே ஆவியின் வரங்களாம். தனது சாமான்களை அவன் விற்கும் போது வாடிக்கைக்காரரிடம் எந்த ஆயுதத்தை எதற்குப் பயன்படுத்தினான் என்றெல்லாம் அவன் விளக்குவதில்லை. அப்படியே, வேதமும் வரங்களுக்கு விளக்கங்களை அல்ல, அவைகளின் விளைவுகளையே பெரிதும் குறிப்பிட்டுக் கூறுகிறது. வரங்களை வரையறுத்துக்கொண்டேயிருப்பது ஆரோக்கியமானதல்ல.

❒

அலறிக்கொண்டிருந்த குருடனை மக்கள் தடுத்து நிறுத்த முடியவில்லை; அவன் இன்னும் கூடுதலாக அலறினான் (மாற் 10:47,48). பாலகரும் சீடரும் சத்தமாய்த் தேவனைத் துதிப்பதைப் பரிசேயரால் தடுத்த நிறுத்த முடியவில்லை (லூக் 19:37-40). சத்தியத்தைப் பறைசாற்றிக்கொண்டிருந்த அப்போஸ்தலரை தேவாலயத் தலைவர்கள் தடுத்து நிறுத்த முடியவில்லை (அப் 4:18,19; 5:28,29). பின்வாங்கிய

குருக்களுக்கும், பெயர்க் கிறிஸ்தவர்களுக்கும் இதோ ஓர் எச்சரிப்பு: ‘‘முள்ளில் உதைக்கிறது உங்களுக்குக் கடினமாம்!’’

❐

பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள் சபைக்குக் கொடுக்கப்பட்டன. பாதாளத்தின் திறவுகோல்கள் சபைத் தலைவராம் கிறிஸ்துவிடம் இருக்கின்றன. நரகைக் கொள்ளையாடவும், பரலோகை நிரப்பவும் என்னே சாத்தியம்.

தேவனது இருதயம் கனத்திருக்கிறது; மக்களது இருதயம் கடினமாயிருக்கிறது; கிறிஸ்தவராகிய நமது இருதயமோ சரிசனையற்றிருக்கிறது. ‘‘பிதாவே, வறண்ட எங்கள் கண்களுக்குக் கண்ணீர் தாரும்; உமது பாரத்துடன் எங்களை மனந்திரும்பாதோரிடம் அனுப்பி வையும்; காலமோ செல்லுதே!’’



»¿°jt thœéš
ãiwthŒ tsu cztë¡F«
xU Âdrç¤ Âahd üš...



*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும்...**
**அனைத்து வயதினரும்...**
**அனைத்துத் துறையினரும்...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு!**

432 பக்கங்கள்;
விலை ரூ. 150/- அனுப்பச் செலவு ரூ. 30/-
10 பிரதிகளுக்குமேல் 30% தள்ளுபடி

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 150/- அனுப்பச் செலவு ரூ. 30/-

*கிடைக்குமிடம்:*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>

# ‘‘பைபிள் புதையல்கள்’’

by **R. ஸ்டான்லி**



ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல் இவ்வுலக வாழ்வின் முடிவுவரை 200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்;
உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 50/-
*ஆங்கிலத்திலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
*ஆங்கிலத்திலிருந்து தமிழ்.*

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 30/-

■

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

*இவை ஆசிரியரிடம் கிடைக்கும்.*



## ஆசிரியரது பிற நூல்கள்

- *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?*
- *ஆனந்த அறுவடை*
- *இரட்சிக்கப்படுவது எப்படி?*
- *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?*
- *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்*
- *ஊழியரும் மக்களும்*
- *எதிர்நீச்சல் வாலிபர்*
- *எழுப்புதல் வரும்போது ...*
- *ஐந்தப்பம் இருமீன்கள்*
- *கண் திறக்கும் கட்டுரைகள்*
- *காட்டுத் தேன்*
- *கீழ்ப்படிதலே மேல்படி!*
- *சமநிலைக் கிறிஸ்தவன்*
- *சிறு நரிகள்*
- *திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)*
- *திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)*
- *நெஞ்சில் நெருப்பு*
- *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!*
- *பொற்பழங்கள்*
- *பைபிள் பதில்கள்*
- *மாணவ மணிகளுக்கு...*
- *வல்லமை தேவனுடையது!*
- *விசுவாச வாழ்வு*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச்செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும்
கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

**StanleyOnBible.com**

*A WEBSITE FOR BIBLE LOVERS*

## CONTENTS


- ❒ ***General Messages***
  Enlightening Articles for Christian Growth
- ❒ ***Sermon Outlines***
  Outlines on miscellaneous subjects for
  Personal Meditation and Pulpit Preaching
- ❒ ***Bible Studies***
  Studies on specific themes
  and select books of the Bible
- ❒ ***Doctrinal Essays***
  Corrective Teaching to uphold
  Sound Doctrines of the Bible
- ❒ ***Youth Matters***
  Practical Guidelines to Young Men
  and Young Women for Successful Living
- ❒ ***Leaders Column***
  Biblical Insights and Practical Lessons
  on Christian Leadership
- ❒ ***Missionary Challenge***
  Calling Christians to obey
  the Great Commission of Christ
- ❒ ***My Answers***
  Answers to Questions
  frequently asked but rarely answered
- ❒ ***Quotable Quotes***
  Stanley's analytical Statements
  about Christian Life and Ministry
- ❒ ***Video Talks***
  Stanley's Bible Sermons
  in Video & Audio format, freely downloadable


Register your e-mail id in this website
to receive updates instantly.



# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும்***
***அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும்,***
***சபைப்பிரிவு பாகுபாடில்லாத, ஒரு திருப்பணி***

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

ஏறத்தாழ 350 முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா,
கர்நாடகம், குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம்,
மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும்
ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற
கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை,
புத்தகங்கள் மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்! ஆதரியுங்கள்!*


**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
*தொலைபேசி: 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org>*
*www.bymonline.org*